37

87



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1949

# ௨ கதைகள்

## மாக்ஸிம் கார்க்கி
## மாபஸான்

◆

தமிழாக்கம்: அசோகன்,

◆

விலை எட்டணா.

87
1-49

0-,3x
N48
111761

லயகம்

# இரண்டு கதைகள்

மாக்ஸிம் கார்க்கி - மாபஸான்

தமிழாக்கம்: அசோகன்.

கலையகம்

14-எ, குப்பையர் தெரு, ஜி. டி. சென்னை.

விலை: எட்டணா.

'கலையகம்' வெளியீடு - 1.
முதற் பதிப்பு, நவம்பர், 1948.

அச்சிட்டோர்:
முத்துக்குமரன் அச்சகம்,
8/99, அம்மன்கோவில் தெரு, சென்னை-1.

# தெரிவிக்கிறோம்

- 'கலையக'த்தின் முதல் வெளியீடாக வருகிறது 'இரண்டு கதைகள்.' தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த நூல்கள் இதைத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

- எமது நூல்கள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்குமென்பதற்கு இந்த புத்தகமே போதிய சான்று.

- 'கலையகம்' தோன்றியதற்கே காரண மாயிருந்த ஆசிரியர் அசோகனுக்கு எமது நன்றி கலந்த வணக்கம்.

'கலையக'த்தார்

14-ஏ, குப்பையர் தெரு,
ஜி. டி. சென்னை.
15 - 11 - 48.

# நன்றி

ரஷ்ய ஆசிரியர், மாக்ஸிம் கார்க்கி எழுதிய 'மனித ஜனனம்', பிரஞ்சு பேராசிரியர் மாபஸான் எழுதிய 'தெளிந்தது' ஆகிய இனிய இரண்டு கதைகளையும் சுவையாக தமிழில்— தனக்கே சொந்தமான தனி நடையில் தந்துள்ளார் ஆசிரியர், அசோகன்.

அறிஞர், அசோகன் அவர்களின் எழுத்துத் திறனைப்பற்றி தமிழ் நாட்டு ரஸிகர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியதில்லை. இச் சிறந்த கதைகளை தமிழில் தந்துதவியதற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு நில்லாமல் மேலும் மேலும் இம் மாதிரி சிறந்த நூல்களை எழுதியுதவுவார் என்று மகிழ்வுடன் கூறுகிறேன்.

14-ஏ, குப்பையர் தெரு,
ஜி. டி. சென்னை.

எம். சூரி

ஆசிரியர்: மாக்ஸிம் கார்க்கி

# மனித ஜனனம்

'92-ம் வருஷம். கோரப் பஞ்சம் தாண்டவ மாடிய சமயம். கோடோர் நதிக் கரையில் ஒஷெம்ஷிரி நகருக்கும், ஸுக்கும் நகருக்குமிடையே யுள்ள பிராந்தியத்தில், கடல் உள் வளைந்திருக்கும் கரைக்குச் சிறிது தூரத்தில், வெள்ளிமய ஒளி சிதறி இன்கிதம் இசைத்துச் செல்லும் நதியின் சப்தத்தையும் மீறி கடல் இரைச்சல் எழுவதைக் கேட்டேன்.

அது இலையுதிர் காலம். பழுப்பேறி உதிர்ந்த சின்னஞ் சிறு இலைகள் கோடோர் நதி எற்றிச் செல்லும் வெண்ணுரைத் திரள்களில் படிந்து, சுறுசுறுப்பான ஸாமன் மீன்களைப் போல இங்கு மங்கும் சுழன்றுகொண்டிருந்தன. ஆற்றை யடுத்த உயரமான கரையின் கல்மீது அமர்ந்திருந்தேன் நான். எனக்கு வலது பக்கத்தில், மரங்கள் அடர்ந்து நின்ற பிரதேசத்திற்குச் சற்றுத் தள்ளி, அலைகள் கரையில் வந்து மோதுமிடத்தில் கடற் பறவைகளும், நீர்க்காகங்களும் கிரீச்சிட்ட வண்ணம்

பறந்துகொண்டிருந்தன. இலைகளை மீன்கள் என எண்ணி ஏமாந்ததுதான் அவை அப்படிப் பறப்பதன் காரணம் என்று நினைத்தேன்.

எனக்கு நிழலளித்து நின்ற செஸ்நட் மரங்கள் பொன்னிறப் பூக்களால் பொலிவுற்று விளங்கின. எனது காலடியில் மனிதக் கரங்களிலிருந்து துண்டிக்கப் பட்ட எண்ணற்ற மணிக் கைகள் போல் சருகுகளின் குவியல், எதிர்கரையில் நின்ற ஹார்ன்பீம் மரங்களிலிருந்து இலைகள் அநேகமாக முழுமையும் உதிர்ந்து விட்டதால் அவை மொட்டையாகி விட்டன. வானவெளியில் கிழிந்த வலையொன்றை விரித்திருப்பதைப் போல காட்சி யளித்தன கிளைகள். அந்த வலையில் சிக்கித் தத்தளிப்ப தைப் போன்று சிறகடித்துத் திரிந்தது மஞ்சளும் சிகப்பும் கலந்த வண்ணமுடைய 'மலங்காட்டு' மரங் கொத்திப் பறவை ஒன்று. அடிக்கடி மரப்பட்டைகளை அது தனது கருநிற அலகால் கொத்தவே உள்ளே பதுங்கியிருந்த பூச்சிகள் வெளிப்பட்டு ஓடின. வட திசை யிலிருந்து வந்த அதிதிகளான டாம் டிட், நட் - ஹாட்ச் போன்ற பறவைகள் அவசர அவசரமாக அவற்றைப் பற்றி விழுங்கின.

எனக்கு இடது புறத்தில் மலைமுகடுகளைத் தொட்ட வண்ணம் தொங்கிய கருநிற மேகங்கள் மழை வரலாம் எனப் பயங் காட்டின. மேகங்கள் சூரிய கிரணங்களை மறைத்ததால் பாக்ஸ் - வுட் மரங்கள் செறிந்த அப் பசுமையான பள்ளத் தாக்கில் கரு நிழற் திட்டுகள் படிந்தன. அங்கு நின்ற பழங்கால பீச், லிண்டன் மரங்களின் பொந்துகளில்தான், வெகுகாலத்திற்கு முன்பு

'பாம்ப்பே தி கிரேட்'டின் ரோமானிய சேனைகளுக்கு அனர்த்தம் விளைய ஏதுவாயிருந்த 'மதுத் தேன்' கூடுகள் இருந்தன. ரோமானிய வீரர்கள் அதன் இனிமை நிறைந்த போதையில் இறங்கி வந்த காரியம் மறந்து பகைவர்களிடம் சிங்கிக் கொண்டார்கள். பே, அஸிலே ஆகிய மரங்களின் பூக்களிலுள்ள மகரந்தத்தி லிருந்து காட்டுத் தேனீக்கள் அத் தேனை சேகரிக்கின்றன. அவ் வழியாகப் போகிறவர்கள் வருகிறவர்கள் அந்தத் தேனை எடுத்து, கோதுமை ரொட்டிகளில் தோய்த்து உட்கொள்வார்கள்.

நான் செய்து கொண்டிருந்த காரியமும் அதுதான். செஸ்நட் மரத்தடியில், கல்மீது அமர்ந்து, கோபங் கொண்ட தேனீ ஒன்று பலமாகக் கொட்டிய இடத்தை தடவியபடியே, டீ சோப்பையில் சேகரித்திருந்த தேனில் ரொட்டியைத் தோய்த்துத் தின்று கொண்டிருந்தேன். அதே வேளையில் இலையுதிர்கால சூரியனின் சோம்பல் விளையாட்டை ரஸித்தேன்.

இலையுதிர் காலத்தில் காகஸஸ் மலைத்தொடர் மகத் தான வேதக் கோயில் ஒன்றின்—மகா பாபிகளாயிருந்து மகா ஞானிகளானவர்கள், துருவி ஆராயும் கண்களி லிருந்து தங்கள் பாபங்களை மறைக்கும் திரையாக, தங்கள் புனிதத்தன்மைக்கு ஒரு கேடயமாக எழுப்பியுள்ள கோவில் ஒன்றின்—உட்புறத்தைப்போலக் காட்சி யளித் தது. மலைத் தொடர்கள் அமைத்துள்ள இயற்கைக் கோவிலிலே பொன்னிறம், ஆகாய நீல நிறம், மரகத வண்ணம் எல்லாம் மின்னின. ஸமர்கண்ட், ஷெமாகா ஆகிய இடங்களிலுள்ள துருக்கியர் நெய்த, அபூர்வ

வேலைப்பாடுகள் இணைந்த கம்பளங்களைப் போர்த்தது போல் அலங்காரமாகத் திகழ்ந்தன. உலகத்திலுள்ள எழிலை எல்லாம் அபகரித்து, இந்த இடத்திற்குக் கொணர்ந்து குவித்து, சூரியனுக்குக் காணிக்கையாக 'இதோ உன்னுடைய பொருள்கள். உனக்கு இவற்றை சமர்ப்பிக்கிறோம்,' எனச் செலுத்துவது போல் தோன்றியது.

......நீண்ட தாடியும், குஷியான குழந்தைகளின் கோலிக்காய் கண்களைப் போன்ற குண்டுக் கண்களும், நரைத்த தலையும் உடைய ராட்சசர்கள் மலைகளிலிருந்து இறங்கி, பொன்னையும், வெள்ளியையும், நவரத்னங்களை யும் மிகவும் தாராளமாக அள்ளி அள்ளி வீசி பூமியை அணி செய்வதாக, மலை முகடுகளுக்கு வெள்ளி முலாம் பூசுவதாக, மலைச் சரிவுகளில், பள்ளத்தாக்குகளி லெல்லாம் வண்ண வண்ண மரங்களை நட்டு அழகு படுத்து வதாக, அவர்களது கை வண்ணத்தால், தெய்வீக அருள் பெற்ற ஸ்தலமாக—எழிலரங்கமாக—இந்த இடம் திகழ்வ தாக எல்லாம் கற்பனை செய்தேன்.

இந்த உலகில் ஒரு மனிதனைப் பிறந்திருப்பது ஒரு பாக்கியம். என்னென்ன அற்புதப் பொருள்களை யெல்லாம் காண முடிகிறது! ஏகாந்தமாக இருந்து, எழிலை அள்ளிப் பருகி, சிந்தனையில் லயிக்கும் போது என்ன இன்பம்! எத்தகைய இதயக் கிளர்ச்சி!

இப்படி ரஸிக்க முடியாமல் போகிற சில சந்தர்ப் பங்களும் உண்டு என்பது உண்மைதான். உங்கள் நெஞ்சில் அளவிட முடியாத கொடூர, குரோதம் குடி

கொள்கிறது. துயரம் பேய்ப் பசியோடு உங்கள் இதய ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறது. ஆனால் அது நிரந்தர மல்ல. சூரியன்கூட அடிக்கடி சோக முலாம் பூசிக் காட்சி யளிக்கிறான். குரோதம் மனிதர்களை அடிமைப் படுத்தி குள்ள மனத்தினராக மாற்றிவிட்டது!

நல்லவர்களும் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்—ஆனால் அவர்களும் சீர்திருத்தப்பட வேண்டும்; 'ரிப்பேர்' செய்யப்பட வேண்டும், முற்றிலும் புதியவர்களாக, முழுதும் நன்மையே உருவானவர்களாக மாற்றப்பட வேண்டும்!

....எனக்கு இடது புறத்தில் செறிந்திருந்த புதர்களுக்கு மேலாக கருந்தலைகள் தென்படுவதைக் கண்டேன். கடல் இரைச்சலையும், நதியின் நகையொலியையும் கேட்டதோடு, இடையே எழுந்த மனிதக் குரல்களையும் கேட்டேன். ஸுக்கும் நகரில் ரோடு போடும் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் வேறு வேலை தேடி ஓஷெம்ஷிரி நகருக்குச் செல்லும்போது பேசிக்கொண்டே போகும் சப்தம் அது.

எனக்கு அவர்களைத் தெரியும். அவர்கள் ஓரல் மலைப் பிரதேச வாசிகள். ஸுக்கும் நகரில் நான் அவர்களோடு சேர்ந்து வேலை செய்திருக்கிறேன். முந்தின நாள் தான் எனக்கும் அவர்களுக்கும் கணக்குத் தீர்த்துக் கொடுத்து இனி வேலை இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு முன்னதாக, இரவிலேயே புறப்பட்டு வந்து விட்டேன் நான். சூரியோதய சமயத்தில் கடற்கரையில் இருந்து உதய எழிலைக் காண வேண்டும் என்பது என் எண்ணம்.

நான்கு மூஷிக் ஜாதியினரும், உயர்ந்த கன்னத்து எலும்புகளுடன் கூடிய ஒரு குடியானவ ஸ்திரீயும் அந்த கோஷ்டியில் இருந்தனர். அவள் பிள்ளைத்தாச்சி. கர்ப்பமாயிருந்த அவளது வயிறு கனத்து முன் தள்ளி யிருந்தது. கபிலமும் நீலமும் கலந்த நிறம் அவளது கண்களின் நிறம். பயத்தால் பிதுங்கி வெளியே நழுவி விழுந்து விடுபவை போன்ற ஒரு தோற்றம். புதர்களுக்கு மேலாக அவள் தலையும் தெரிந்தது. தலையிலே ஒரு மஞ்சள் நிறக் கைக்குட்டையைக் கட்டி யிருந்தாள். முழுதலர்ந்த ஒரு சூரியசாந்திப்பூ காற்றில் அசைந்தாடுவது போலக் காட்சி யளித்தது அது. பழங்களை அதிகமாகச் சாப்பிட்டது காரணமாக வியாதியில் விழுந்து ஊ-றிக்கும் நகரிலேயே காலமாகிவிட்டான் அவள் கணவன். இந்த ஆட்களோடு ஒரே குடிசையில் தான் வசித்தேன் நான். ரஷ்யர்களின் புராதன சம்பிரதாயத்தை யொட்டி தங்களது துரதிர்ஷ்டத்தைப் பற்றி அடிக்கடி அவர்கள் புலம்புவது வழக்கம். அவர்களது ஓலம் அநேக மைல்களுக்கு அப்பாலும் கேட்கும்படி ஒப்பாரி வைப்பார்கள் அவர்கள்.

துயரங்களால் நசுக்கப்பட்டு, வாழ்வில் மந்தமானவர்கள் அவர்கள். துயரம் அவர்களை வாட்டி எடுத்து, இலையுதிர்காலத்தில் உதிரும் இலைகளை காற்று எற்றித் தள்ளுவது போல, அவர்களது சொந்த ஊரையும், தரிசு நிலங்களையும் விட்டு விட்டு இந்த இடத்தை நோக்கி வரச் செய்தது. இந்த இடத்தின் அதிசய வளம் அவர்களை மிகவும் கவர்ந்தது. ஆனால் இங்கு உழைப்பு அவர்களை சக்கையாகப் பிழிந்தது. சுற்றுப் புறங்களிலுள்ளவற்றை

யெல்லாம் அவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். சோகத்தால் மயங்கிய விழிகள் பிதுங்க நோக்கினார்கள். பின்பு பரிதாபகரமான புன்சிரிப்புடன் ஒருவருக்கொருவர் 'காதைக் கடித்தார்கள்'.

'ஐய்ய்யா!...என்ன வளமான பூமி!'

'பயிர்கள் இப்பொழுதுதான் முளை விடுது.'

'முளைத்திருப்பது அவ்வளவு சுகமா இல்லை. என்ன அப்படித்தானே?'

பின்பு தமது மூதாதையரது சரீரம் சாம்பலாகி ஐக்யமான சொந்தக் கிராமங்களான கோபில்லோஸோக், ஸூக்கோய் கான், மோக்ரென்கி ஆகிய இடங்களைப் பற்றிப் பேசினார்கள். அவர்கள் நினைவில் அவை நிரந்தரமாக நிலைத்திருந்தன. அவை அவர்களுக்குப் பரிச்சயமானவை. உயிருக்கு உயிரானவை. நெற்றி வியர்வையை நீராக்கி அவற்றை வளமாக்கப் பாடு பட்டிருக்கிறார்கள் அவர்கள்.

அவர்களோடு இன்னொரு ஸ்திரீயும் இருந்தாள். அவள் உயரம். நிமிர்ந்த நன்னடை அவள் நடை. பலகையின் மேற்புறம்போல் தட்டையான நெஞ்சு. அகன்ற நாடி. மாறுகண். நிலக்கரியைப்போல் கருமையான விழிகள். அவற்றிலே ஒளி இல்லை.

சாயங்கால வேளைகளில், அவள், மஞ்சள் கைக்குட்டையைத் தலையில் சுற்றியிருந்த அந்த ஸ்திரீயோடு, குடிசையை விட்டுக் கிளம்புவாள். ஒரு கல் குவியல் மீது போய் அமர்வாள். கன்னத்தில் கையூன்றி, தலையை

ஒரு பக்கம் சாய்த்து, கோபம் கலந்த பலத்த குரலில் பாடுவாள்:

கோவிலுக்கு எதிரே
குத்துப் புதருகே
மஞ்சள் நிற நிலத்தில்
பஞ்சு வண்ண மேலாக்கை
பாயாகப் பரப்பி
காதலர் வருவாரென்று
காத்திருப்பேன் நான்...
கண்ணாளன் வந்ததுமே
விண்ணானமாய் வரவேற்பேன்......

மஞ்சள் கைக்குட்டைக்காரி மௌனமாக அமர்ந்து தன் வயிற்றைப் பார்த்தபடியே இருப்பது வழக்கம். சில சமயங்களில் திடீரென அவளும் பாட்டில் கலந்து கொள்வாள். அவள் குரல் கனமாக, ஆண்குரல் மாதிரி ராகம் இழுக்கும். வார்த்தைகளை உச்சரிப்பதிலே சோகச் சாயை மிளிரும்.

இனி யுனைக் காணவும்......
எனக்கு விதியிலேயோ......
என் அன்பே........
என் அன்பே......

நாங்கள் வசித்த இடம் தென்பிரதேசத்தைச் சேர்ந்தது. எனினும் கன்னங்கரிய இருள் அடர்த்து மூச்சுத் திணறச் செய்யும்படியான புழுக்கம் நிலவும் இரவுகளிலும் வடக்குத் திசையிலுள்ள பனிப் பிரதேச நினைவை எனக்கு இந்தச் சோகப் பாடல்கள் எழுப்பும். ஓலமிடும்

பனிப்புயலும், ஊளையிடும் ஓநாய்களும் என் ஞாபகத்திற்கு வரும்.

சில நாட்களில் அந்த மாறுகண்காரி காய்ச்சலில் விழுந்து விட்டாள். ஒரு 'ஸ்டரச்சரில்' போட்டு அவளை நகரத்திற்கு எடுத்துப் போனோம். நடு வழியில் அவளுக்கு ஜன்னி கண்டு விட்டது. பிதற்ற ஆரம்பித்து விட்டாள். அப் பிதற்றல் அவளது அந்த 'வேதக்கோவில் வெளி, மணற் பிரதேச' பாட்டை விடாமல் பாடுவது போலவே ஒலித்தது.

...... புதருக்கு மேலாகத் தெரிந்த மஞ்சள் கைக்குட்டை யணிந்த தலை திடீரென புதருக்கப்பால் மறைந்து விட்டது.

எனது சாப்பாடும் முடிந்தது. டீ கப்பிலிருந்த தேனுக்கு இலையைக் கட்டி மூடினேன். எனது பைக்குள் வைத்து முடிந்து கொண்டு, கிளம்பி சாவதானமாக எனக்கு முன் சென்றவர்களைப் பின் தொடர்ந்தேன். கார்னல் மரத்தாலாகிய எனது ஊன்றுகோலை 'டக், டக்' என ஊன்றி நடந்தேன்.

இப்படியாக ரோடின் குறுகலான பகுதியை அடைந்தேன். வலது புறம் நீல நெடுந் திரைக் கடல். கண்களுக்குப் புலப்படாத ஆயிரம் ஆயிரம் தச்சர்கள் தங்களது இளைப்புளிகளால் நீர்ப்பரப்பைச் செதுக்குவது போலத் தோன்றியது. செதுக்குண்ட வெண்ணிறச் சிதர்கள் கரையை நோக்கிச் சிதறின. காற்று அவற்றை உந்தித் தள்ளியது. காற்றிலே ஒருவித உணர்ச்சி, பருமனான ஒருத்தியின் ஈரமும், உஷ்ணமும், மணமும் கலந்த மூச்சு

மேலே படுகிற மாதிரி, துருக்கிப் பாய்மரக் கப்பல் ஒன்று ஸு-றெக்குமை நோக்கிப் போய்க்கொண் டிருந்தது. அதனது பாய்கள் ஸு-றெக்கும் நகரப் பிரமுகரில் ஒருவரான ரோட் எஞ்சினியரின் கன்னங்களைப் போல் புடைத்திருந்தன. என்ன எழவு காரணமோ தெரியாது. எப்பொழுதும் 'ஷட் அப்' என்பதற்குப் பதிலாக 'ஷ-றெட் வுப்' என்றே அவர் சொல்வது வழக்கம்.

'ஷ-றெட் வுப். சண்டை போடலாம்ங்ற நினைப்பு உனக்கு ருக்கலாம். ஆனால் ரெண்டு தையிலே நான் உன்னை போலீஸ் ஸ்டேஷனுக்குத் தள்ளிட்டுப் போயிருவேன்' எனபார் அவர்.

ஜனங்களைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு தள்ளுவதில் அவருக்கு ஒரு குஷி. இப்பொழுது அவர் செத்து வெகு காலமாகி விட்டது. கல்லறையில் அவர் சடலத்தை புழுக்கள் சாப்பிட்டு எலும்பு மட்டுமே எஞ்சி யிருக்கும் என்பது மகிழ்விற்குரிய ஒரு விஷயம்.

....நடந்து போவது அவ்வளவு சுலபமாயிருக்காது! ஆகாயத்திலே மிதக்கிற மாதிரி இருக்கிறது. இனிய நினைவுகள், உல்லாசச் சம்பவங்கள் எல்லாம் ஞாபக வெளியிலே இன்ப கீதம் இசைத்தன. எனது உள்ளத்தில் எதிரொலிக்கும் இந்தக் குரல்கள் கடலில் குதித்தாடும் வெண்ணுரைகள் போன்றவை. எல்லாம் மேலுக்குத்தான். ஆழத்திலே, இதயத்தின் அடித்தலத்திலே அமைதி நிலவியது. ஆழாழியுள் திரியும் வெள்ளி நிற மீன்கள் பாதிரி இளமையின் உற்சாக உல்லாச நினைவுகள் சாவதானமாக நீந்தின.

ரோடு கடற்கரையை நோக்கி இழுத்துச் சென்றது. வளைந்து வளைந்து அலைக்கரங்கள் வந்து தழுவும் மணற் பரப்பை ஒட்டிப் போயிற்று. கடலின் அழகைக் கிட்ட நெருங்கிப் பார்க்க விரும்புபவை போல் புதர்களும் ரோடுக்கு மேலாகக் கிளைகளை நீட்டி நீலத் திரைக் கடலுக்கு வரவேற்புக் கூறின.

காற்று மலையில் இருந்து கிளம்பி மழை வரும் என எச்சரித்துச் சென்றது.

......அடர்ந்த புதர்களுக்கு ஊடே இருந்து ஒரு முனகல்—மனிதக் குரல்—இதயத்தைத் தொடுவது—எழுந்தது.

புதர்களை விலக்கித் தலை நீட்டிப் பார்த்தபொழுது அவள், தலையில் மஞ்சள் கைக்குட்டை கட்டிய அந்த ஸ்திரீ, முதுகை ஒரு மரத்தில் சாய்த்து உட்கார்ந்திருக்கக் கண்டேன். தலை ஒரு பக்கமாக தோளில் சாய்ந்திருந்தது. வாய் கோணியிருந்தது. கண்கள் பைத்தியக்காரன் பார்வை மாதிரி பிதுங்கியிருந்தன. சூல் வயிறைக் கைகளால் தாங்கியிருந்தாள். சுவாசம் மிகவும் சிரமத்துடன் வெளி வந்தது. வயிறு இழுப்பு நோயால் துடிப்பது போல் துடித்தது. பிரக்ஞையற்ற நிலையிலே முனகிக் கொண்டிருந்தாள் அவள். ஓநாயின் பற்களைப் போன்ற அவளது மஞ்சள் நிறப் பற்கள் தெரிந்தன.

'என்ன விஷயம்? உன்னை யாராவது துன்புறுத்தினார்களா?' எனக் கேட்டேன் நான், அவள் அருகில் போய். புழுதி படிந்திருந்த தன் காலை மற்றொரு காலால் துடைத்தாள், தன்னைத் தானே சுத்தம் செய்துகொள்

ளும் ஒரு ஈயைப் போல. தனது தலையை அசைத்தாள். பெரு மூச்சுடன், தூரப் போ! வெட்கமில்லே உனக்கு!... போய் தொலே!' என்ருள்.

விஷயம் என்ன என்பது எனக்கு விளங்கி விட்டது. இது மாதிரி சம்பவத்தை முன்பு பார்த்திருக்கிறேன். இருந்தும் பயந்து விட்டேன். திரும்பவும் ரோடை அடைந்தேன். மீண்டும் பலமான நெடிய ஓலம் எழுந்தது அவளிடமிருந்து. பிதுங்கிய அவள் விழிகள் தெறித்து விழுந்து விடும் போல் தோன்றியது. திரண்ட கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்தது.

இவை என்னே மீண்டும் அவள் அருகில் இழுத்தன. எனது பையைத் தூர விட்டெறிந்தேன். அவளே எடுத்து மல்லாக்காகப் படுக்க வைத்தேன். முழங்கால்களே மடிக்க முயன்றேன். அவள் என்னேத் தூரத் தள்ளிஞள். முகத்தில் குத்திஞள். மார்பில் அறைந்தாள். திரும்பி கால்களாலும், கைகளாலும் தவழ்ந்து புதருக்குள் மறைய முயன்ருள், ஒரு பெண் கரடி மாதிரி உறுமிய வண்ணம்.

'சைத்தான்!...மிருகம்!' எனத் திட்டிஞன்.

கைகள் தெம்பிழந்தன. அவள் விழுந்தாள். முகம் தரையில் மோதியது. திரும்பவும் ஒரு கதறல். கால்கள் சுண்டிச் சுண்டி இழுத்தன.

நிலேமையின் நெருக்கடியிலே இத்தகைய சந்தர்ப்பம் பற்றிய எனது அனுபவத்தை யெல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்தேன். அவளேப் புரட்டி மல்லாக்காகக்

கிடத்தினேன். கால்களை மடித்து வைத்தேன். நஞ்சுக் குடம் வெளிப்படத் தொடங்கியது.

'அமைதியாயிரு. பிரசவம் ஆகிறது,' என்றேன்.

கடற்கரைக்கு ஓடினேன். எனது சட்டையின் கைகளை மடித்தேன். கரங்களைச் சுத்தமாக அலம்பினேன். மருத்துவம் பார்க்கத் தயாராகத் திரும்பினேன்.

நெருப்பில் சிக்கிய புழுப் போல துடித்தாள் அவள். இரு கைகளாலும் தரையை நையப் புடைத்தாள். பிய்த்துத் தின்ன விரும்புகிறவளைப் போல உலர்ந்த புற்களைப் பிருண்டிப் பெயர்த்தாள். அப்படிச் செய்த பொழுது பயங்கரமாக, கொடூரமாக மாறிய முகத்திலும், இரத்தம் கட்டி நின்ற கண்களிலும் தூசியை வாரிப் போட்டுக் கொண்டாள். நஞ்சுக் குடம் உடைந்தது. குழந்தையின் தலை வெளிப்பட்டது. ஜன்னி கண்ட மாதிரி உதறிய அவளது கால்களை பிடித்து நிறுத்த வேண்டி யிருந்தது. குழந்தை வெளிப்பட உதவ வேண்டியிருந்தது. தன் வாயில் புல்லையும் மண்ணையும் அவள் திணித்துக் கொள்ளாதபடி கண்காணிக்க வேண்டியிருந்தது......

இந்த நிலையில் ஒருவருக்கொருவர் வசை பாடிக் கொண்டோம். கெட்டியாக மூடிய பற்களுடன் அவள் என்னைத் திட்டினாள். நான் மெதுவாக அவளை ஏசினேன். அவள் வேதனையால் திட்டினாள். நான் நாணத்தால் ஏசினேன். எனது செயல் குழப்பத்தின், அவள் மீது கொண்ட இரக்கத்தின் விளைவு......

'கடவுளே! அட ஆண்டவனே!' கரகரத்த குரலில் கத்தினுள் அவள். வெளிறிய உதடுகளில் பற்கள் பதிந்திருந்தன. கடைவாய்ப் புறங்களில் நுரை வழிந்தது, திடீரென ஒளி மங்கிய கண்களிலிருந்து, ஒரு தாயின் தாங்கொணுத பிரசவ வேதனை காரணமாக வடியும் கண்ணீர் ஆருகப் பொங்கி வழிந்தது. அவளது தேகத்தையே இறுக்கி இரு கூறுகப் பிளப்பது போலிருந்தது.

'சனியனே, போ! போய்த் தொலே!'

அவளது தெம்பிழந்த, பொருத்து கழன்றது போல் வலிவிழந்த, கரங்களால் என்னைத் தூரத் தள்ளியபடியே யிருந்தாள்.

'அசட்டுத் தனமாக உளருதே. சிரமப்பட்டுப் பொறுத்துக் கொள். எல்லாம் சரியாகி விடும்,' என வேண்டிக் கொண்டேன்.

இரக்கத்தால் என் நெஞ்சு பிளந்து விடும்போல் தோன்றியது. அவளது கண்ணீர் என் கண்களில் தெறிக்கிற மாதிரி இருந்தது. எனது இருதயம் வெடித்து விடுமோ என உணர்ந்தேன். கத்த வேண்டும் போல் தோன்றியது.

'உம். ஜல்தி!' எனக் கத்தினேன்.

அப்பாடா! கடைசியாக ஒரு சின்னஞ் சிறு மனித உருவம்—பீட்ரூட் கிழங்கு மாதிரி சிவந்த உருவம்—என் கைகளில் விழுந்தது. என் கண்களில் கண்ணீர் பொங்கியது. நீர் நிறைந்த என் கண்களால் அந்தச் சின்னஞ் சிறு சிசு அதற்குள்ளாக உலகத்தின் மீது அதிருப்தி

யுற்று, கால்களை உதைத்து, அழுது போராடத் தொடங்கி விட்டதைக் கண்டேன். இத்தனைக்கும் அதற்கும் அதன் தாய்க்கும் உள்ள பிணைப்பு இன்னும் அறுபடவில்லை. அதன் கண்கள் நீல நிறமாய் மிளிர்ந்தன. அதன் இக்னி மூக்கு விசித்திரமாய், சிவப்பு மூஞ்சியில் சப்பையாய் பொருந்தி யிருப்பதாய் தோன்றியது.

'க்வா, க்வா' என அது அழுத பொழுது அதன் உதடுகள் துடித்தன.

அதன் உடல் மிகவும் சிறியதாய், எனது கரங்களினின்றும் நழுவி விழுந்துவிடுமோ என்ற சந்தேகம் எழத் தூண்டுவதாய் இருந்தது. முழங்கால் படியிட்டு அமர்ந்து அதன் முகத்தைப் பார்த்துச் சிரித்த வண்ணம்—அதைக் கண்ட உவகையால் குதூகலித்த வாறே—அமர்ந்திருந்தேன். அடுத்தபடியாகச் செய்யவேண்டியது என்ன என்பதையே மறந்து விட்டேன்.

'தொப்புள் கொடியை நறுக்கு' என மெதுவாகச் சொன்னாள் தாய். அவளது கண்கள் மூடி யிருந்தன. அவள் முகம் பிரேதத்தின் முகத்தைப் போல வெளுத்து விகாரமாகக் காட்சியளித்தது. நிறம் மங்கிய உதடுகளில் சலனமில்லை.

'கத்தி யிருந்தால் அதை நறுக்கு' என்றாள்.

ஆனால் குடிசையில் இருந்தபொழுது எனது கத்தியை யாரோ திருடிவிட்டார்கள். எனவே தொப்புள் கொடியை என் பல்லால் கடித்து அறுத்தேன். ஓரல் மலைப்பிரதேச வாசிக்கு இயல்பான குரலில் குழந்தை வீறிட்டது.

தாயின் முகத்தில் புன்னகை அரும்பியது. கண்களில் ஆச்சரியகரமாக புத்தொளி பிறந்தது. ஆழங் காண முடியாத அக் கண்களில் ஒரு நீல நிற ஜோதி மின்னியது. சிவந்த அவள் கரங்கள் அங்கியைத் தடவி பையைத் துழாவின. ரத்தக் கறை படிந்த உதடுகள் அசைந்தன.

'உம்ம்......பலமில்லே...ஒரு சிறு துண்டு நாடா... என் பாக்கட்டில்......தொப்புளே கட்டு' என்ருள்.

சிறு துண்டு 'டேப்' பை தேடி எடுத்து, குழந்தையின் தொப்புளே இறுக்கிக் கட்டினேன். இன்னும் ஆனந்தமாக புன்சிரிப்பு உகுத்தாள் தாய். என் கண்களேக் கூசச் செய்யும் பிரகாசத்துடன் விளங்கியது அப் புன்னகை.

'நான் போய் குழந்தையைக் குளிப்பாட்டி வந்து விடுகிறேன். நீ உன்னேச் சரி செய்துகொள்,' என்றேன்.

'ஜாக்கிரதை. பதனமாகக் குளிப்பாட்டு. மிகவும் கவனமாகச் செய்,' என முனகிஞள் அவள் ஆவலுடன்.

ஆனல் இந்தச் செந்நிறக் குள்ளனிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பது தேவையில்லே. தனது முஷ்டிகளே ஆட்டி, என்னேக் குஸ்திக்குக் கூப்பிடுபவனேப் போல அலறிஞன் அவன்.

'க்வா......ங்வா.'

'அதுதான் சரி. அதுதான் சரி. சின்னத்தம்பியே! உன் உரிமையை ஸ்தாபிதம் செய். இல்லேயெனில் உனது அண்டை அயலில் உள்ளவர்கள் உன்னேத் தலையைத்

தட்டி அமுக்கப் பார்ப்பார்கள்,' என நான் அவனை எச்சரித்தேன்.

எங்கள் இருவர் மீதும் சீறி மோதிய அலைத்துளிகள் பட்டதுமே அவன் ஒரே ராட்சசக் கதறல் கதறினான். ஆனால் நான் அவன் மார்பில் தட்டியதும் என்னை முழித்துப் பார்த்தான். பின்பு அலைமேல் அலையாக வந்து அவனைக் குளிப்பாட்டிய சமயத்தி லெல்லாம் அவன் திமிறினான்; கதறினான்.

'கத்து! பலமுள்ளவரை கதறு! ஒரல் மலைப்பிரதேச வாசி நீ என்பதை உலகிற்கு அறிவி!' என உற்சாகமூட்டினேன்.

திரும்பவும் நான் அவனை அவனுடைய தாயிடம் கொணர்ந்த பொழுது அவள் மறுபடியும் கண்களை மூடிப் படுத்திருந்தாள். வேதனையால் உதட்டைக் கடித்த வண்ணம் இருந்தாள். ஆனால் முக்குதல் முனக்குதலுக்கிடையே அவளது குரல் 'அவனை என்னிடம் கொடு' என வேண்டுவது எனக்குக் கேட்டது.

'அவன் காத்திருக்கட்டும்!'

'ஊஹூம். கூடாது. அவனை என்னிடம் கொடு.'

நிலையற்று நடுங்கும் கரங்களால் தனது ரவிக்கையை அவிழ்த்தாள். நான் அவளுக்கு உதவினேன். இயற்கை இருபது குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கு வேண்டிய வளத்துடன் அவள் மார்பகங்களைப் படைத்திருந்தது. அவள் தடுமாறியபடியே குழந்தையை தன் உடலோடு அணைத்துக் கொண்டாள். விவரத்தைப் புரிந்துகொண்ட குழந்தை உடனே கதறுவதை நிறுத்தியது.

'கன்னி மரியாளே! தேவ மாதாவே!' என்று முனகிப் பெருமூச்சு விட்டாள் தாய். அவளது தலை அப்படியும் இப்படியும் புரண்டது.

திடீரெனக் கொஞ்சம் பலமாக அலறினாள். பின்பு மௌனமானாள். பின்பு தனது அழகிய கண்களால், புதிதாகக் குழந்தை பெற்றெடுத்த தாயின் புனிதக் கண்களால், விழித்து நோக்கினாள். பார்வை பொருளற்றதாய் தோன்றியது. நீல நிறக் கண்கள் நீல வானத்தைப் பார்த்தன. நன்றி கலந்த குதூகலம் ததும்பும் புன்னகை யொன்று அவற்றில் மின்னி மறைந்தன. பலவீனமான கையை உயர்த்தி தனக்கும், குழந்தைக்கும் சிலுவை அடையாளம் இட்டுக் கொண்டாள் அவள்.

'கன்னி மரியாளே, தேவ மாதாவே உமது நாமம் ஜபிக்கப் படுவதாக....' என்றாள்.

கண்களில் சுடரிட்ட ஒளி மீண்டும் மங்கியது. முகத்திலே பழைய சவக் களை படர்ந்தது. நீண்ட நேரம் மௌனமாகவே இருந்தாள். மூச்சு விடும் சப்தம் கூடத் தெளிவாக இல்லை. திடீரென்று அவள் குரல் ஒருவிதத் தீர்மானத்துடன் ஒலித்தது.

'எனது பையை எடுத்து திற அப்பா.'

நான் பையை அவிழ்த்தேன். அவள் என்னை வெறித்து நோக்கினாள். லேசான புன்சிரிப்பு ஒன்று முகத்தில் தவழ்ந்தது. நாணத்தின் ரேகை வதனத்தில் ஓடியதாக நான் நினைத்தேன். மிகவும் நுண்ணிய நாண உணர்வு அவளது குழிந்த கன்னங்களில் நெளிந்து

மறைந்த மாதிரி இருந்தது. அவள் நெற்றியில் வியர்வை அரும்பியது.

'கொஞ்சம் எட்டப்போ,' என்றாள் அவள்.

'ஜாக்கிரதை. ரொம்பவும் உடம்பை அலட்டிக் கொள்ளாதே,' என எச்சரித்தேன்.

'சரி, சரி. நீ போ.'

பக்கத்துப் புதர்களிடையே மறைந்தேன். மிகவும் களைத்திருந்தேன். அழகிய பறவைகள் எனது இதய பீடத்தமர்ந்து இனிமையாகப் பாடுகிற மாதிரி இருந்தது. கடலின் ஓயாத முணு முணுப்போடு கலந்து இந்த இசை இனிமையாக ஒலித்தது. வருஷம் முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றியது.

சமீபத்தில் எங்கோ ஓடை ஒன்று குமிழிட்டு ஓடியது. அதன் சப்தம் யுவதியொருத்தி தனது காதலனோடு 'கல, கல' வென சம்பாஷிப்பதைப் போல் ஒலித்தது......

புதர்களுக்கு மேலாக ஒரு தலை தெரிந்தது. அதில் வழக்கமான தோரணையில் மஞ்சள் கைக்குட்டை சுற்றப் பட்டிருந்தது. அதற்குள் அவள் எழுந்து விட்டாள்!

'ஏ, இது என்ன? இவ்வளவு சீக்கிரமாக எழுந்து விட்டாய்?' ஆச்சரியத்தால் இரைந்தேன் நான்.

கொடிகளை உதவிக்காகப் பற்றி, மெதுவாகத் தரையில் அமர்ந்தாள் அவள். அவளது பலமெல்லாம் அவளை விட்டுப் பிரிந்து விட்டது போல் தோன்றினாள். முகம் ஒரே வெளுப்பாக இருந்தது. ஆனால் கண்கள் மட்டும்

அகண்ட சுனைகள் மாதிரி, நீல நிறத்தோடு மிளிர்ந்தன. அன்பான புன்னகை ஒன்று சிதறி, அவள் சொன்னாள்:

'இங்கே பார். அவன் தூங்குகிறான்.'

ஆம். அவன் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து விட்டான். நான் பார்த்த வரையில் எல்லாக் குழந்தை களையும் போலவேதான் அவனும் காணப்பட்டான். பேதம் எதாவது இருந்ததானால் அது சூழ்நிலையில் தான். ஒரு புதருக்கு அடியில், இலையுதிர் காலத்து சருகுகளின் மெத்தையில் படுத்திருந்தான் அவன். ஓரல் மலைப் பிராந்தியத்தில் நடக்க முடியாத சம்பவம் இது.

'தாய் நீயும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது' என்றேன்.

பலவீனமாகத் தலையாட்டிய அவள் 'வேண்டாம். நான் என் சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு அந்த இடத்திற்குப் போக வேண்டும்....அந்த இடத்துப் பெயர் என்ன?' என்றாள்.

'ஓஷெம் ஷிரியா?'

'ஆம் அங்குதான். என்னோடு வந்தவர்கள் எவ் வளவோ மைல் முன்னேறி யிருப்பார்கள் என நினைக்கிறேன்.'

'அது சரி. உன்னால் நடக்க முடியுமா?'

'கன்னி மரியாள் இருக்கிறாள். அவள் எனக்கு உதவாமலா போவாள்?'

கன்னி மரியாள் அவள் துணைக்கு வருவாள் என்கிற போது நான் என்ன சொல்ல முடியும்!

துயிலில் ஆழ்ந்திருக்கும் சின்னஞ் சிறு முகத்தைப் பார்த்தாள். அன்பு ஒளி அவளது கண்களில் சுடரிட்டது. நாக்கால் மெதுவாக உதடுகளைத் தடவி விட்டுக் கொண்டாள். கைகள் மெதுவாக மார்பைத் தட்டின.

சருகுகளைச் சேர்த்துக் கொளுத்தினேன். சில கல்களை எடுத்துப் போட்டு அடுப்பாக்கி அதில் கெட்டிலை வைத்தேன்.

‘தாயே, உனக்கு இன்னும் ஒரு நிமிஷத்தில் டீ தயாரித்துத் தருகிறேன்’ என்றேன்.

‘அப்படியா. ரொம்ப அருமை. என் நெஞ்செல்லாம் உணர்ந்து விட்டது போலிருக்கிறது’, என்றாள் அவள்.

‘உன் ஜனங்கள் உன்னை விட்டு விட்டுப் போய் விட்டார்களா?’

‘இல்லையே! அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? நான் பின்னால் தங்கி விட்டேன். அவர்கள் இரண்டு மூன்று தடவை குடித்த போதையில் இருந்தார்கள். அவர்கள் என்னுடன் இருந்திருந்தால் என்ன செய் திருப்பார்களோ நானறியேன்......’

அவள் ஓரக்கண்ணால் என்னைப் பார்த்தாள். கைகளால் முகத்தை மூடினாள். காறித் துப்பினாள். ரத்தமும் எச்சிலும் கலந்து விழுந்தது. நாணத்தோடு புன்சிரிப்பு சிரித்தாள்.

‘இது தலைச்சன் பிரசவமா?’ எனக் கேட்டேன்.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 11761 EGMORE, MADRAS

'ஆம் தலைக் குழந்தைதான்......நீ யார்?'

'என்னைப் பார்த்தால் தெரியவில்லையா? நான் ஒரு மனிதன்.'

'நீ மனிதன் என்பது இருக்கட்டும். உனக்குக் கல்யாணமாகிவிட்டதா?'

'இன்னும் அந்த பாக்யம் கிட்ட வில்லை'

'பொய் சொல்கிறாய் நீ'

'நான் ஏன் புளுக வேண்டும்?'

அவள் கண்கள் தாழ்ந்தன. சிந்தனையில் லயித்தாள் அவள். பின்பு கேட்டாள்:

'அப்படியானால் பொம்பிளைகள் விவகாரமான இந்த ஜோலியை எப்படித் தெரிந்து கொண்டாய்?'

இப்பொழுது நான் புளுகினேன். 'நான் ஒரு மாணவன். பள்ளிக்கூடத்தில் இதைக் கற்றேன். மாணவன் என்றால் உனக்குத் தெரியுமா?' எனக் கேட்டேன்.

'என் தெரியாமல்? எங்களூர் பாதிரியின் மூத்த பையனும் படிக்கிறவன்தான். அவன் ஒரு மதகுரு ஆவதற்குப் படிக்கிறான்......'

'நானும் அவன் மாதிரிதான்...........நான் போய் கெட்டிலை கவனிக்கிறேன்.'

தனது தலையை குழந்தை முகத்தருகே நீட்டி சுவாசமிருக்கிறதா எனக் கவனித்தாள். பிறகு கடல் இருந்த திக்கில் பார்வை எறிந்தாள். 'மேலெல்லாம் கழுவினால் தேவலை. ஆனால் தண்ணி எப்படி இருக்குமோ

தெரிய வில்லையே! ஏனப்பா தண்ணி எப்படி? ஒரே உப்பாகவும் கடுப்பாகவும் இருக்கிறதா என்ன?'

'நீ போய் உடம்பை சுத்தம் செய்து கொள். இந்தத் தண்ணீர் கெடுதல் ஒன்றும் செய்யாது.'

'அப்படியா?'

'நிசமாகத்தான் சொல்கிறேன். ஓடைத் தண்ணியை விட வெது வெதுப்பாகவும் இருக்கும். இந்த ஓடைத் தண்ணி ஒரே ஜில்லுன்னு பனிக்கட்டி மாதிரி யிருக்கும்.'

'நீ சொன்னால் சரிதான்.'

அபேஷியன் ஒருவன் அவ் வழியாகக் குதிரையில் போனான். அவனது தலையில் ரோமமடர்ந்த ஆட்டுத் தோல் தொப்பி இருந்தது. தலை தாழ்ந்து மார்பைத் தழுவி யிருந்தது. குதிரை மெதுவாக நடந்தது. அவன் தூங்குகிற மாதிரித் தோன்றியது. நாங்கள் இருந்த இடத்திற்கு வந்ததும் குதிரை செவிகளை நிமிர்த்தியது. தலையைத் திருப்பி உருண்டையான கருங் கண்களால் எங்களைக் கவனித்தது. கனைத்தது. ஒரு உலுப்பு உலுப்பிக் கண் விழித்தான் சவாரி வந்தவன். எங்கள் பக்கம் பார்த்தான். திரும்பவும் கண்ணயர்ந்து விட்டான். குதிரை அதன் வழியே சென்றது.

'இந்தப் பக்கத்து ஆட்களே விசித்திரப் பிராணிகள் தான். பார்க்கவும் பயங்கரமா யிருக்கிறார்கள்' என்றாள் அவள்.

நான் ஓடைப் பக்கம் போனேன். தண்ணீர் பாத ரசம் மாதிரி பள பளப்பாகவும் நிலையற்றும் விளங்கியது.

கூழாங்கற்களை உருட்டி ஒலி எழுப்பிய வண்ணம் குமிழி யிட்டு ஓடியது. உதிர் இலைகள் மேலும் மேலும் நீர்ப் பரப்பில் படிந்து புரண்டோடின. அற்புதமான காட்சி! முகம், கைகால்கள் அலம்பினேன். செட்டிலை ரொப்பி னேன். புதர்கள் வழியே வந்தபொழுது, அந்த ஸ்திரீ கால்களாலும், கைகளாலும் கல்களுக்கு மேலே தவழ் வதைக் கண்டேன். அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தாள் அவள்.

'என்ன விஷயம்?' என விசாரித்தேன்.

ஏதோ ஒரு பயம் கவ்வியதைப் போல திடுக்கிட்டு நின்றாள் அவள். முகம் ஒரேயடியாக வெளுத்துப் போயிற்று. தனது தேகத்தோடு ஒட்டவைத்து எதையோ மறைக்க முயல்கிற மாதிரித் தெரிந்தது. என்ன விஷயம் என யூகித்து விட்டேன்.

'அதை என்னிடம் கொடு. நான் புதைக்கிறேன்' என்றேன்.

'நீ பேசுவது என்ன பேச்சு! ஸ்நான அறைக்கு எடுத்துப் போய் பூமிக்கு அடியில் புதைக்க வேண்டும் அதை......'

'இந்த இடத்தில் வந்து யாராவது ஸ்நான அறை கட்டுவார்கள் என்பது உன் நினைப்பா?'

'நான் பயப்படும் ஒரு விஷயம் உனக்கு விளையாட் டாக இருக்கிறது! ஏதாவது காட்டு விலங்குகள் வந்து அதைத் தின்று விட்டால்.........அதனால் அதை ஆழமாக........'

இப்படிச் சொன்னவள் அதோடு நிறுத்தி, எனது கையில் ஈரம் சொட்டும், கனமான மூட்டை ஒன்றைக் கொடுத்தாள். வெட்கத்தால் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

'நீ சரியாக இக் காரியத்தைச் செய்து முடிப்பாய் என்று நினைக்கிறேன். என்ன, செய்வாயா? கிறிஸ்து பெருமான் பேரால், எனது குழந்தையின் சார்பில், வேண்டிக் கொள்கிறேன். எவ்வளவு ஆழமாகப் புதைக்க முடியுமோ அவ்வளவு ஆழமாகப் புதை. என்ன சரிதானு?' எனக் கேட்டாள். அவள் குரல் பரிவாக ஒலித்தது.

......நான் ஜோலியை முடித்துத் திரும்பியபொழுது அவள் கடற்கரையிலிருந்து தள்ளாடித் தள்ளாடி வருவதைக் கண்டேன். அவள் பாவாடை முழுவதும் நனைந்திருந்தது. முகத்திலே பழைய சோபையின் சாயை. அகத்தின் மகிழ்வு முகத்திலே பிரதிபலித்தது. அவளைக் கையைப்பற்றி நடத்தி, கணப் பருகில் கொண்டு உட்கார வைத்தேன். 'இவளுக்குத்தான் எவ்வளவு தைரியம்!' என்ற வியப்பு.

பின்பு நாங்கள் தேன் கலந்த தேநீர் பருகிய பொழுது, அவள் அமைதியாகக் கேட்டாள்:

'நீ படிப்பை நிறுத்தி விட்டாயா?'

'ஆம்.'

'ஏன்? குடிக்கத் தொடங்கியது காரணமா?'

'ஆம், அம்மா! நான் கெட்டு குட்டிச் சுவராய்ப் போனேன்.'

'ரொம்ப நல்ல காரியம் செய்தாய்! எனக்கு உன்னை நினைவிருக்கிறது. ஸ்டெக்குமில் நீ ஒருநாள் முதலாளி யோடு உணவு விஷயமாக சச்சரவிட்டுக்கொண் டிருக் கையில் நான் உன்னைப் பார்த்திருக்கிறேன். அப்பவே சொல்லிக் கொண்டேன்: குடிகாரப் பயல் இவன். இவனுக்கு எதிலும், யாரிடத்திலும் பயம் இல்லை என்று.'

கனத்திருந்த அவள் உதடுகளில் படிந்த தேனை நாவால் ருசித்த வண்ணம். அவள் அடிக்கடி புதர் பக்கம், அந்தப் புதிய ஓரல் ஜாதியினன் உறங்கிக் கொண் டிருந்த இடத்தை நோக்கி, பார்வையைச் செலுத்தினாள்.

'அவன் எப்படித்தான் பிழைக்கப் போகிறானோ?' என்றாள் என் முகத்தை நோக்கியபடி. அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளியாயிற்று. 'நீ எனக்கு உதவி செய்தாய். அதற்காக நன்றி......ஆனால் அவனுக்கு நன்மை விளையுமோ என்னவோ........நானறியேன்' என்றாள்.

சாப்பிட்டு முடிந்ததும் சிலுவை அடையாள மிட் டாள். நான் என் சாமான்களைப் பொறுக்கிச் சேர்த் தேன். அவள் உடம்பை அசைத்த வண்ணம் இருந்தாள். திரும்பவும் ஒளி மங்கிய கண்களால் தரையையே வெறித்து நோக்கியபடி சிந்தனையில் லயித்திருந்தாள். கொஞ்ச நேரத்தில் எழுந்தாள்.

'உண்மையாகவே நீ புறப்பட்டு விட்டாயா' எனக் கேட்டேன்.

'ஆம்'

'தாயே, ஜாக்கிரதையாய் நடந்துகொள்.'

'கன்னி மரியாள் இருக்கிறாள்......அவளை எடுத்து என் கையில் கொடு!'

'நான் எடுத்து வருகிறேன்.'

அதைப்பற்றி கொஞ்ச நேரம் விவாதம் நடந்தது. கடைசியாக அவள் சம்மதித்தாள். நாங்கள் புறப் பட்டோம். ஒருவர் பக்கத்தில் ஒருவராக தோளோடு தோள் உராய ஒட்டி நடந்தோம்.

'தடுமாடி விழுந்து விட மாட்டேன் என நம்பு கிறேன்,' என்றாள். குற்றவாளி மாதிரி அசட்டுச் சிரிப்பு சிரித்தாள். தன் கையை என் தோளில் ஊன்றி நடந்தாள்.

ருஷ்ய நாட்டின் புதிய பிரஜை, எதிர்கால கதி என்ன என்பதை அறியாத மனிதன், என் கைகளில் சுக நித்திரை பயின்று, குறட்டை விட்டான். வெள்ளை நிற ஜாலர்கள் அலை மோதும் கடல் எழுந்து கரையில் மோதிப் பின் வாங்கியது. புதர்கள் ஒன்றோடொன்று ரகசியம் பேசின. பிரகாசமாகக் காய்ந்த சூரியன் வான உச்சியைத் தாண்டிச் சென்றான்.

நாங்கள் மெதுவாக நடந்தோம். இடையிடையே அவள் நின்றாள். ஆழ்ந்த பெருமூச்சு எறிந்தாள். தலையைத் திருப்பி பின் பக்கமும், சுற்றுப் புறத்தையும் பார்த்தாள். கடல், காடுகள், மலைகள், எல்லா இடங் களிலும் அவள் பார்வை பதிந்தது. கடைசியாகக் குழந்தையின் முகத்தைப் பார்த்தாள். சோகக் கண்ணீ ரால் சுத்தமாக்கப்பட்ட அவள் கண்கள் அற்புதமாகப் பிரகாசித்தன. அளவிட முடியாத அன்பைப் பிரதி பலிப்பனவாய் நீல வண்ணத்தோடு மிளிர்ந்தன.

ஒரு இடத்தில் நின்று அவள் சொன்னாள்:

'ஆண்டவனே! அன்பும், இரக்கமும் வடிவான ஆண்டவனே! என்ன இன்பம்! என்ன இன்பம்! இதே மாதிரி உலகின் அந்தம் வரை நான் நடக்க முடியுமானால், எனது மதலை வளர்ந்து, பெரியவனாகி சுதந்திர புருஷனாக சதா தாய்க்கு அருகிலேயே வசிக்க வழி ஏற்பட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்! என் அருமைக கண்மணி இவன்......'

......தூரத்தே கடலின் ஓயாத முணு முணுப்பு.

---

ஒவ்வொருவரும் அவசியம் படிக்க —
— வேண்டிய அருமையான புத்தகம்!

# விதவையின் காதல்

சுப. நாராயணன் எழுதியது.

விதவைக்குக் காதலா? என்று கேட்கப்படும் இந்தக் காலத்தில் ஆம்! அது நியாயம் என்று நெஞ்சை நிமிர்த்திப் பதில் சொல்லுகிறது இந்தப் புத்தகம்.

தனிப் பிரதி விலை: ரூ. 1. வேண்டுவோர் ரூபாய் 1-2-0 மணியார்டர் செய்யவும்.

விற்பனையாளருக்கு 25% கழிவு தரப்படும்.

எரிமலைப் பதிப்பகம்

துறையூர், :: திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் : மாபஸான்

# தெளிந்தது

அது அவனைப் பிடித்தது ஒரு ஞாயிற்றுக்கிழமை யன்று. பிரார்த்தனை முடிந்து திரும்பிய சமயத்தில், சர்ச்சிலிருந்து வீட்டிற்குப் போகும் குறுக்குப் பாதை வழியாக நடந்து கொண்டிருந்தான் அவன். அப்பொழுது அவள் — மார்ட்டின் குடும்பத்தைச் சேர்ந்த யுவதி— அவனுக்கு முன்பாகப் போய்க் கொண்டிருந்தாள்.

அவளுடன், அவளருகே, அவளது தந்தை ஒரு பணக்காரக் குடியானவனுக் குரிய பெருமிதத்துடன் நடை போட்டுச் சென்றார். மேலங்கிக்குப் பதிலாக கபில நிறத் துணியாலான 'வெய்ஸ்ட் கோட்' ஒன்று அணிந்திருந்தார் அவர். தலையை அகலத் தொப்பி ஒன்று அலங்கரித்தது. 'லேஸ்' வைத்துத் தைத்த ரவிக்கை அணிந்திருந்தாள் அவள். அதை வாரத்திற்கு ஒரு முறைதான் அவள் அணிவது வழக்கம். நேராக நிமிர்ந்து நடந்தாள். முதுகு கூனலின்றி விரைப்பாக

இருந்தது. அகன்ற தோள்கள் அழகாக மிளிர்ந்தன. எடுப்பான சகனபாகங்கள் அவள் நடக்கையில் ஏறி யிறங்கின. பூக்களால் அலங்கரிக்கப்பட்ட தொப்பி அவள் தலையில். உருண்டு, திரண்டு, மிருதுவான கழுத்து. அதில் படிந்து, காற்றால் அலையுண்டு, சூரிய ரச்மியால் பளபளக்கும் கூந்தல்.

இது அவள் பின்னழகு. இதை மட்டுமே பெனுய்ஸ்ட் காண முடிந்தது. ஆனால் ஏற்கனவே பரிச்சயமான முகம் தான். அதனால் அவன் அவளது பின் எழிலை திருப்பத் திருப்ப விழிகளால் அள்ளி அள்ளிப் பருகினன். திடீரெனத் தானகவே சொல்லிக் கொண்டான் 'என்ன அழகு! மார்ட்டின் குட்டி பலே ஜோர்!'

அவள் நடந்துபோகும் நளினத்தை ஆசை கொண்ட மட்டும் அள்ளிப் பருகினன். வெறித்து வெறித்துப் பார்த்தான். காம உணர்வு அவனைத் தகிக்கத் தொடங் கியது. அவள் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லாமலே அவன் தேன் குடித்த நரியானன். அவள் தோற்றத்தில் கண்களை விதைத்து, யாருடனே சொல்வது மாதிரி, தானகவே திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டான் 'குட்டி ஷோக்குதான்!'

அவள் அவளது தந்தை ஜான் மார்டினுக்குச் சொந்த மான, அவளது வீடான, 'மார்டினரி' யை நெருங்கியதும் வலது புறம் திரும்பினள். திரும்பும்பொழுது அவளையே அதிசயமாகப் பார்க்கும் பெனுய்ஸ்ட் அவள் கண்ணில் பட்டான். 'குட் மார்னிங் பெனுய்ஸ்ட்' என்றாள். 'குட் மார்னிங் மிஸ் மார்டின், குட் மார்னிங் மிஸ்டர்.

மார்டின்' என்று சொல்லியபடியே வீட்டைத் தாண்டி நடந்தான் அவன்.

அவன் தன் வீட்டை அடைந்தபொழுது சாப்பாட்டுச் சமயமாக இருந்தது. மேஜை முன்பு அவனது தாய், வேலைக்காரன், வேலைக்காரப் பையன், ஆகியோர் இருந்தனர். வேலைக்காரி ஸிடார் மது கொண்டுவரப் போயிருந்தாள். அவன் தன் தாய்க்கு எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தான். இரண்டு கரண்டி சூப் எடுத்துச் சாப்பிட்டான். பின்பு பிளேட்டைத் தூரத் தள்ளிவிட்டான்.

'உனக்கு என்ன வந்து விட்டது? உடம்பு சரியில்லையா?' என விசாரித்தாள் தாய்.

'வயிற்றிலே ஏதோ கடுப்பு மாதிரி இருக்கிறது: பசி இல்லை' என்றான்.

ஒரு சிறு துண்டு ரொட்டியை எடுப்பது, அதை வாயில் போட்டு சாவதானமாக மென்று விழுங்குவது, மற்றவர்கள் சாப்பிடுவதைப் பார்ப்பது என்றிருந்தான் அவன். நினைவெல்லாம் அந்த மார்டின் குட்டி மீதுதான். 'என்ன இருந்தாலும் அவள் அழகே அழகு!' அவள் அழகை அவன் அவ்வளவு நாட்களாகப் புரிந்துகொள்ளவில்லை. அன்று திடீரெனக் கண்டுபிடித்ததும் அவனால் சாப்பிடக் கூட முடியவில்லை. வேறு பதார்த்தங்கள் எதையும் தொடாமலே இருந்தான்.

'பெனாய்ஸ்ட். ஏதோ கொஞ்சம் சாப்பிடப்பா. இதோ இருப்பது ஆட்டுக்கறி. ருசியாயிருக்கு. பசி

யில்லென்னுலும் ஏதோ கொஞ்சம் உள்ளே தள்ளி வைப்பது நல்லது' என்ருள் தாய்.

ஒரு வாய் எடுத்துப் புசித்தான். பின்பு பிளேட்டைத் தூரத் தள்ளிவிட்டான் 'சுத்தமாய்ச் சாப்பிடவே முடியலே' என்ருன்.

எழுந்து தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்தான். தானே மாடுகளை மேய்த்துக் கொள்வதாகச் சொல்லி பையனுக்கு அரைநாள் லீவு கொடுத்து அனுப்பினுன். விடுமுறை நாளாதலால் ஊர் முழுவதும் வெறிச்சோடிக் கிடந்தது. ஒரு இடம் விட்டு மறு இட்டமாகப் புல் வெளிகளில் மெதுவாக நடந்து மேய்ந்தன பசுக்கள். வெயில் காய்ந்த வண்ணம் அசைந்து அசை போட்டன. உழுத வயல்களில் ஓரமாகக் கலப்பைகள் கிடந்தன. விதை தெளிப்பதற்குத் தயாராக உழுது போடப் பட்ட நிலங்களில், உழவு சால்களில் புரட்டிப் போடப் பட்ட புது மண்ணுக்கிடையே முந்திய அறுவடையின் போது விடப்பட்ட கோதுமை, ஓட் தாள்கள் திட்டுத் திட்டாகத் தலை நீட்டி நின்றன.

இலையுதிர் காலத்துக் காற்று — ஓரளவு வறண்ட காற்று—சம வெளிகளில் உலவியது. அதனுல் சூரியாஸ்தமணப் பொழுது மனேகரமான மாலைப் பொழுதாக அமையும் என நிச்சயிக்க முடிந்தது. ஒரு பள்ளத்தருகில் அமர்ந்து தொப்பியை எடுத்து முழங்கால்களின் மீது வைத்தான் அவன். கொதி நினைவுகள் கூத்தாடும் தலைக்கு குளிர்ந்த காற்றுத் தேவை என நினைத்து அப்படிச் செய்வது போலிருந்தது அவன் செயல். வயல்

வெளியில் நிலவிய மோனத்தைக் குலைக்கும் உரத்த குரலில் சொன்னான் 'அழகு தேவை என்று ஏற்படு மானால் எனக்கு ஒரு அழகி இருக்கிறாள்' என்று.

இரவு படுக்கப் போகுமுன்பும் அவள் நினைவு. மறுநாள் கண் விழித்த போதும் அஃதே. அவனுக்கு இன்பமூட்டும் நினைவுதான். எனினும் மன நிம்மதிக்கு உலை வைத்து விட்டது. ஏனப்பா இவ்வளவு சிரமப் படுகிறாய் எனக் கேட்டிருந்தால் அவனாலேயே சமா தானம் கூறி யிருக்க முடியாது. ஏதோ அவனைப் பீடித்து விட்டது. அவன் உள்ளத்தைப் பிணைத்து விட்டது. அவனை விட்டு நீங்காத நினைவாக, உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டு பண்ணுவதாக அமைந்திருந்தது அது.

சில வேளைகளில் நாம் பார்க்கிறோம். ஒரு அறைக் குள் வண்டு ஒன்று வந்து சிக்கிக் கொள்கிறது. வளைய வளைய வந்து அது செய்யும் ரீங்காரத்தைக் கேட்கிறோம். சப்தம் நம் கவனத்தைக் கவர்கிறது. நமக்கு எரிச்ச லூட்டுகிறது. திடீரென நின்று விடுகிறது. உடனே நாம் அதை மறந்து விடுகிறோம். மறுபடியும் கிளம்பு கிறது. நமது கவனத்தை வலுக்கட்டாயமாகக் கவர் கிறது. வண்டைப் பிடிக்கவோ, அடித்துக் கொல்லவோ, ஒரு இடத்தில் அடைபட்டுக் கிடக்கச் செய்யவோ முயல் கிறோம். முடிவதில்லை. கடைசியில் தொலையட்டும் என விட்டு விடுகிறோம். மார்ட்டின் யுவதியின் நினைவும் பெனய்ஸ்டின் மனதில் அப்படித்தான் படிந்தது, அறைக் குள் சிறைப்பட்ட வண்டைப் போல.

திடீரென, அவளைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. மார்ட்டீன் வீட்டுப் பக்கம் போய்

அப்படியும் இப்படியுமாக அலைந்தான். வெகு நேரம் சென்று அவள் வந்து இரண்டு ஆப்பிள் மரங்களுக்கு இடையே இருந்த ஒரு கயிற்றுக் கொடியில் ஏதோ துணிகள் காயப் போட முயல்வதைக் கண்டான்.

குளிர் அதிகமாக இல்லாத காலம். ஓரளவு புழுக்கம் கூட இருந்தது. எனவே ஒரு சிறு பாவாடை யும், 'பாடி' யும் மட்டுமே அணிந்திருந்தாள். அதனால் அவள் துணிகளை கொடியில் பிணைத்தபோது உயர்த்தி வளைத்த தந்தக் கரங்களின் எழிலை நன்கு கண்டு ரசிக்க முடிந்தது. அவள் மறைந்து ஒரு மணி நேரம் வரை அவன் பள்ளத்து அருகில் போய் படுத்திருந்தான். முன்னை விட அதிகமாக அவள் அழகு தன்னைக் கவர்ந் ததை உணர்ந்தான்.

ஒரு மாதமாயிற்று. இன்னும் அவன் மனதில் அவளே குடி கொண்டிருந்தாள். ஆதலால் அவளது பெயர் அவன் எதிரே உச்சரிக்கப் பட்டால் போதும். அவன் உடலில் 'ஷாக்' அடித்தது போன்ற ஒரு அதிர்ச்சி ஏற்படும். உணவு கொள்ளவில்லை உறக்கம் பிடிக்க வில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் பிரார்த்தனையின் போது பார்வை அவள் மீது பாய்வதைத் தடை செய்ய முடிய வில்லை. அவள் அதைக் கண்டு கொண்டாள். தன் அழகை அவன் ரஸித்து வியப்பதில் அவளுக்கு ஒரு பெருமை. எனவே அவனைப் பார்த்துப் புன் சிரிப்பு உகுப்பாள்.

பின்பு ஒரு நாள். மாலை நேரம். அவன் அவளை ரோடில் சந்தித்தான். அவன் தன்னை நோக்கி வரு வதைக் கண்ட அவள் நின்றாள். அவன் நேரே அவளிடம்

போனான். பயம் பிடித்தது. பேசத் திணறினான். எப்படியாவது பேசியே தீர்ப்பது என முடிவு செய்தான். 'தத்திப்பத்தி' பேசத் தொடங்கினான்.

'இங்கே பார் மிஸ் மார்டின். என்னால் இனி இதைத் தாள முடியாது.'

அவள் கேலியாகக் கேட்டாள்:- 'எதை பெனய்ஸ்ட்

'ஒரு நாளில் எத்தனை மணி நேரம் உண்டோ அத்தனை மணி நேரமும் உன்னைப்பற்றி நினைப்பதை என்றான் அவன்.

இடுப்பில் கை வைத்த வண்ணம் நின்ற அவள் பதில் இதுதான்:—'நானா என்னைப் பற்றி நினைக்கச் சொல்லி கட்டாயப் படுத்துகிறேன்?'

'ஆம். நீதான். நான் தூங்க முடியவில்லை. சாப்பிட முடியவில்லை' என முணுமுணுத்தான் அவன்.

'இந்த நோய் தெளிய என்ன தேவை என எண்ணுகிறாய்?' அவள் குரல் மெதுவாக ஒலித்தது.

அவனால் பதில் சொல்ல முடியவில்லை. கையைப் பிசைந்த வண்ணம் நின்றான். கண்கள் சுழன்றன. வாய் திறந்தபடி இருந்தது. நெஞ்சில் ஓங்கி ஒரு அறை அறைந்து விட்டு அவளால் எவ்வளவு வேகமாக ஒட முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடி மறைந்தாள் அவள்.

அன்றிலிருந்து அவர்கள் அடிக்கடி வயற் புறங்களில்' ரோடில் எல்லாம், சாயங்கால வேளைகளில் அவன் வாயத்திற்குக் குதிரைகளை ஓட்டி வரும் பொழுதும்,

அவள் பசுக்களைத் தொழுவத்திற்கு ஓட்டிச் செல்லும் சந்தர்ப்பங்களிலும் சந்தித்தார்கள். தன் உடலையும் உள்ளத்தையும் ஏதோ ஒரு அதீத சக்தி அவளை நோக்கி இழுப்பதாக உணர்ந்தான். அவளை அணைத்து, உடலோடு உடலாகப் பிணைத்து, கண்டங் கண்டமாக மென்று விழுங்கி, எப்படியாவது தன்னோடு தானாக ஐக்யமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற வெறி பிடித்தது. இயலாததால் ஏற்பட்டவை ஒரு நடுக்கம், ஒருவித ஆத்திரம், கோபம்.

கிராமத்தில் வதந்திகள் பரவின. அவர்கள் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகப் பேச்சு அடிபட்டது. அவன் அவளைத் தனது மனைவியாக முடியுமா எனக் கேட்டான். அவள் சரி எனச் சம்மதித்து விட்டாள். பெற்ரோர் சம்மதம் பெறச் சந்தர்ப்பம் எதிர் நோக்கிக் காத்திருந்தனர் இருவரும்.

திடீரென அவள் குறிப்பிட்ட நேரங்களில் அவனைச் சந்திக்க வரவில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில், பிரார்த்தனையின் போதுகூட அவன் நன்ருக அவளைத் தரிசிக்க முடியவில்லை. ஒரு ஞாயிறு, வேதப் பிரசங்கம் முடிந்ததும், உதவிக் குரு, பிரசங்க ஆசனத்திலிருந்து ஒரு செய்தி அறிவித்தார். அக் கிராமத்தில் ஒரு கல்யாணம் நடைபெறப் போகிறது, விக்டோரியா அடிலேட் மார்டினும், ஜோசப் ஐடோர் வாலினும் ஒருவரை யொருவர் மணக்க ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என்பதே அச் செய்தி.

ரத்தக் கொதிப்பு ஏற்பட்டதைப் போல உணர்ந்தான் பெனுய்ஸ்ட். காதுகளை ஏதோ பேரிரைச்சல் செவிடு படுத்துவதாக ஒரு உணர்வு. எதையும் தெளி

வாகக் கேட்க முடியவில்லை அவனால். வேதப் புத்தகத்தைக் கண்ணீர் நனைக்க, தான் அழுதிருப்பதாக உணர்ந்தான் சிறிது நேரம் சென்று.

அதன் பின்பு ஒரு மாதம் வீட்டை விட்டு வெளியே வரவில்லை அவன். பிறகு மீண்டும் வேலைக்குப் போகத் தொடங்கினான். இருந்தும் 'பித்தம்' தெளியவில்லை. அவள் நினைவு அகலவில்லை. அவள் வீட்டு வழியாக நடக்கவே நாணினான். அவள் வீட்டு மரங்களை ஏறெடுத்து நோக்கக் கூடக் கூசினான். இது காரணமாக காலையிலும் மாலையிலும் வேறு வழியாக, சுற்றி வளைத்து நடமாடிக் கொண்டிருந்தான்.

அவளுக்கும் வாலினுக்கும் கல்யாண மாயிற்று. வாலின் அந்த ஜில்லாவிலேயே பெரும் பணக்காரக் குடியானவன். பெனய்ஸ்டும் அவனும் பால்ய முதலே சிநேகிதர்கள் தான். எனினும் இப்பொழுது சந்தித்துப் பேசுவதை அவன் நிறுத்தி விட்டான்.

ஒரு நாள் மாலை. பொது இடம் ஒன்றில் நடைபெற்ற பேச்சிலிருந்து அவள் கர்ப்பமாக இருப்பதாக அறிந்தான். அவனுக்கு வருத்தம் ஒன்றும் இல்லை. துயரம் விளைவிப்பதற்குப் பதிலாக அச் செய்தி ஆறுதலே தந்தது. விஷயம் முடிந்தது; ஒருவாறு தீர்ந்தது; கல்யாணம் ஏற்படுத்திய பிளவு இன்னும் பெரிதாகி விட்டது என எண்ணினான்.

சில மாதங்கள், மேலும் சில மாதங்கள் எனக் காலம் ஓடியது. சில வேளைகளில் அவள் மெதுவாக நடந்து உலவுவதைக் காண நேர்ந்தது. அவனைக் கண்டதும்

அவள் கன்னங்களில் 'குப்' பென சிவப்பேறும். தலை தாழும். நடையில் வேகம் ஏற்படும். எனவே அவள் கண்ணில் படாமல் விலகி மறைவான் அவன்.

அவளை நேருக்கு நேராகச் சந்தித்துப் பேச முன் மாதிரியே இப்போதும் பயந்தான். கடந்து போன நாட்களில் அவளது கரங்களைப் பற்றி, கூந்தலில் முத்த மிட்டுப் பேசிய பேச்சுக்கள் நினைவு வந்தன. இப்போது சந்தித்தால் என்னத்தைப் பேசுவது? முதல் சந்திப்பு நிகழ்ந்த இடம் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்தது. அப்படி யெல்லாம் வாக்குறுதி யளித்த அவள் இப்பொழுது எவ்வளவு படுக்காளித் தனமாக நடந்து கொண்டாள்?

நாளடைவில் படிப்படியாகக் கோபம் தணிந்தது. எஞ்சியது துயரம் ஒன்றுதான். ஒரு நாள் அவளது வீட்டை அடுத்துள்ள அவனது பழைய பாதை வழியே சென்றான். தூரத்தில் வரும்போதே வீட்டுக் கூரை தெரிந்தது. அங்குதான் அவள் இன்னொருவனுடன் வாழ்க்கை நடத்துகிறாள். ஆப்பிள் மரங்கள் பூச்சொரிந்து நின்றன. அந்தத் தோட்டத்தின் புகழ் குறித்து புள்ளினங்கள் கீதம் இசைத்தன. ஜனங்கள் அலுவல்கள் காரணமாக வெளியே போய் விட்டனர். அந்த இடம் ஆள் நடமாட்ட மற்றுக் கிடந்தது. வேலியருகில் நின்று தோட்டத்தில் எட்டிப் பார்த்தான். நாய் ஒன்று வாசலுக்கு எதிரே படுத்துக் கிடந்தது. மூன்று கன்றுக் குட்டிகள் ஆடி அசைந்து ஒன்றன் பின் ஒன்றாக அலைந்தன. குட்டையை நோக்கிப் போயின. 'கேட்' அருகில் ஒரு மேடைப் பாடகனின் தோரணையில் வான்கோழி ஒன்று கோழிகளுக்கு முன்னிலையிலே வட்டமிட்டுக் கொண் டிருந்தது.

பெனுய்ஸ்ட் ஒரு கம்பத்தின் மீது சாய்ந்தான். அழவேண்டும் என்ற உணர்வு பிறந்தது திடீரென. அச் சமயம் உள்ளே இருந்து ஒரு ஓலம் எழுந்து காதைத் துளைத்தது. அவன் கவனத்தை கவர்ந்தது. வேலிக் கம்பிகளைப் பற்றி நின்ற அவன் ஆச்சர்யமாகக் கவனித் தான் இன்னொரு கதறல். நெஞ்சைப் பிளப்பதாக எழுந்து நெடு நேரம் ஒலித்தது. அவனது உடலை, உள்ளத்தை உலுக்கியது அக் கதறல். ஆபத்தில் இருப்பது அவள்தான்! அவள்!

கடைசியாக வேலியைத் தாண்டி, உள்ளே புகுந்து, வீட்டுக் கதவைத் தள்ளித் திறந்தான். அவள் தரையில் விழுந்து கிடந்தாள். வேதனையால் வெளிறிய அவள் முகம் சோபை குன்றித் தோன்றியது. கண்கள் குழி விழுந்து விகாரமாகக் காட்சி யளித்தன. பேறுகால வேதனையில் அவள் உழன்றாள்.

பயத்தால் அவளைவிட உடல் வெளுக்க, உடல் நடுங்க அவன் அங்கு நின்றான். 'அன்பே நான் வந்து விட்டேன். இதோ இங்கிருக்கிறேன்' என முனகினன் அவன்.

அவள் பெருமூச்செறிந்து சொன்னாள் — 'என்னோடு இரு பெனுய்ஸ்ட்! விட்டு விட்டுப் போய் விடாதே!'

என்ன சொல்வது, என்ன செய்வது எனத் தெரியா மல் அவன் அவளையே பார்த்தபடி நின்றான். அவள் திருப்பவும் கதற ஆரம்பித்தாள், 'ஏ அப்பா. சே, இவ் வேதனை என்னை இரு கூறாகப் பிளந்து விடும் போலிருக் கிறது பெனுய்ஸ்ட்!'

பயங்கர வேதனையால் துடித்தாள் அவள். திடீரென அவளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் பெனுய்ஸ் டிற்கு உதித்தது. அவளது வேதனையைக் குறைக்க வழி செய்ய வேண்டும், முற்றிலும் அகற்ற வேண்டும் என எண்ணினான். அவளருகே சென்று, குனிந்து, அவளை வாரி எடுத்து, கட்டிலில் கொண்டு கிடத்தினான். அவள் முனகிக் கொண்டேதானிருந்தாள். அவன் அவள் ஆடைகளை அகற்றினான். தலையில் சுற்றி யிருந்த கைக் குட்டையைக் களைந்தான். கைகளைக் கடித்த வண்ணம் கதறாமல் இருக்க முயன்றாள் அவள். பசு மாடுகளுக்கு, செம்மறியாடுகளுக்கு, குதிரைகளுக்கு மருத்துவம் பார்த்துப் பழக்கப்பட்ட தோரணையில் அவளுக்கும் பிரசவம் பார்க்கத் தொடங்கினான் அவன். தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து, வாட்ட சாட்ட மான குழந்தை ஒன்றை கரங்களில் ஏந்தி எடுத்தான் அவன். குழந்தை கத்தத் தொடங்கியது.

குழந்தையைத் துணியால் துடைத்துச் சுத்தம் செய்தான். கணப்பருகே காய்ந்து கொண்டிருந்த ஒரு துணியை எடுத்துச் சுற்றினான். மேஜை மீது குவிய லாகக் கிடந்த 'லினன்' துணிகளுக்கு நடுவே படுக்க வைத்தான். பின்பு தாயருகில் வந்தான். திரும்பவும் அவளைத் தூக்கி தரையில் படுக்க வைத்தான். படுக்கையை மாற்றி அவளை கட்டிலில் தூக்கிப் போட்டான். 'வந்தனம் பெனுய்ஸ்ட். நீ மிகுந்த தைரியசாலி' என்றாள். அவள் குரல் சன்னமாக ஒலித்தது. பின்பு சிறிது நேரம் அழுதாள், ஏதோ துயரம் அவளைக் கவ்வியது போல.

ஆனால் அவனோ! அவள் மீது கொண்டிருந்த மோகத்தை அறவே மறந்து விட்டான். துளிகூட இப்பொழுது அவனுக்குப் பழைய ஆசை இல்லை. அவனது மயக்கம் தெளிந்தது. ஏன்? எப்படி? அவனாலேயே விளக்கம் கூற முடியாது. பத்து வருஷங்கள் கண்காணாத இடத்திற்குப் போய் இருந்து நினைவை அகற்ற முயன்றாலும் அவ்வளவு சுலபத்தில் அகற்ற முடியாது. அவ்வளவு மகத்தான பயன் நடைமுறை நிகழ்ச்சியால் கிடைத்தது.

'என்ன குழந்தை?' எனக் கேட்டாள் அவள், மீண்டும் பலவீனமான குரலில்.

'பெண். குழந்தை மிகவும் அழகு' எனப் பதிலளித்தான் அவன் கலக்கமற்ற குரலில்.

மறுபடியும் மௌனத்திலாழ்ந்தனர் இருவரும். அந்நிலை கொஞ்ச நேரம். சில விநாடிகளில் தாய் மிருதுவாகக் கேட்டாள்:— 'பெனாய்ஸ்ட் அவளை எனக்குக் காட்டு'

அவன் போய் அக் குழந்தையை எடுத்து வந்தான். ஆசீர்வதித்து ரொட்டியை அருளுவது போல அதை அவள் முன் காட்டினான். அச் சமயம் வீட்டுக் கதவு திறந்தது. ஐடோர் வாலின் உள்ளே நுழைந்தான். முதலில் விஷயம் புரியவில்லை. பின்பு திடீரென அனைத்தையும் ஊகித்து உணர்ந்தாள்.

'இந்த வழியே போனேன். சப்தம் கேட்டது. உள்ளே வந்தேன். வாலின், இதோ உன் குழந்தை!' என மென்று விழுங்கினான் பெனாய்ஸ்ட்.

கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய, தன்னிடம் கொடுக்கப்பட்ட அச் சின்னஞ்சிறு சிசுவை வாங்கி, மார்புறத் தழுவி சில நிமிஷ நேரம் மெய் மறந்து நின்ருன் கணவன். பின்பு அவன் குழந்தையைப் படுக்கையில் கிடத்தினன். பெனுய்ஸ்டை நோக்கிக் கரங்களை நீட்டிய வண்ணம் 'எல்லாம் புரிந்து விட்டது. விவரம் தேவையில்லை. பெனுய்ஸ்ட் விரும்பினுல் இனி நாம் இருவரும் நண்பர்களாக, வெறும் சிநேகிதர்களாக இருப்போம்' என்ருன்.

'எனக்குச் சம்மதம். நிச்சயமாகச் சம்மதம்' எனப் பதிலளித்தான் பெனுய்ஸ்ட்.

## 'கலையகம்' வெளியீடு – 3

காலம் ஓடுகிறது; மனிதர்கள் பிறக்கிறார்கள்; சாகிறார்கள்! ஆனால் உலகம் உருப்படவில்லை!

▲

சிந்தனை கேட்கிறது

# 'விடியுமா?'

◆

புதுயுகக் கருத்துகள் நிறைந்த சீர்திருத்த நாடகம்.

வல்லிக்கண்ணன் எழுதியது.

▼

96 - பக்கங்கள் கொண்ட உயர்ந்த பதிப்பு.

விலை: ரூ. 1

கலவியில் இன்பமளிப்பது!

**— 'காமரூபி' —**

காலத்திற் கேற்ற

அவிழ்தம்!

இது தான் தேவை!

½-சேர் புட்டி 1-க்கு

விலை ரூ. 6 0 0

தபாற் செலவு வேறு.

மலையப்பசாமி வைத்ய சாலை,

ரயில்வே பீடர் ரோட்,

பழனி. S. I.

# புது யுக இலக்கியங்கள்

**இரண்டு கதைகள்**
மாக்ஸிம் கார்க்கி—மாபஸான்
தமிழாக்கம்: அசோகன் — 0 8 0

**அண்ணா**—கட்டுரை
தீட்டியவர்: தில்லை - வில்லாளன் — 0 4 0

**விடியுமா?**—நாடகம்
ஆசிரியர்: வல்லிக்கண்ணன் — 1 0 0

**இன்ப நாட்கள்**—கதை
ஆசிரியர்: 'சுதர்சன்' — 0 6 0

விற்பனையாளருக்கு 25% கழிவு உண்டு.
தபாற் செலவு இனம்.

—— பிரசுரம்: ——

**கலையகம்**

14-ஏ, குப்பையர் தெரு, :: ஜி. டி., சென்னை.